தினமணி

21.06.2015

# மருத்துவமனை மேலாண்மை படிப்பு: விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, ஜூன் 20: சென்னையில் மருத்துவமனை மேலாண்மை சான்றிதழ் படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து சங்கர நேத்ராலயா அகாதெமியின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பு:

மருத்துவமனைகள், மருத்துவம் சார்ந்த நிறுவனங்களில் நிர்வாகம், மேலாண்மை துறைகளில் பணியாற்றும் இள நிலை, மத்திய நிலை ஊழியர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, 12 வார இறுதி நாள்களில் (சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை) பயிற்சியை வழங்கி வருகிறது.

இந்தப் படிப்பில் தகவல் தொடர்பியல் திறன், சுகாதார சேவையில் மனிதவள மேலாண்மை, மருத்துவமனைகளுக்கான தர அங்கீகார முறைகள், சுகாதாரப் பாதுகாப்பு சட்டங்கள் உள்ளிட்ட சிறப்பம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

மருத்துவமனை மேலாண்மை சான்றிதழ் படிப்பின் 10-ஆவது தொகுதிக்கான வகுப்புகள் ஜூலை 18 -ஆம் தேதி சனிக்கிழமை முதல் தொடங்குகிறது. இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் www.thesnacademy.ac.in என்ற இணையதளம், 9710485295 என்ற செல்லிடப்பேசி எண் ஆகியவற்றைத் தொடர்பு கொள்ளலாம். விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க கடைசி நாள் ஜூன் 30 ஆகும்.